
www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

# துவிதம்



ஆழியாள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

# துவிதம்

ஆழியாள்

மறு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்


- **Title** : **THUVITHAM** (Book of poems)
- **Subject** : Poetry, Expatriate Writing
- **Author** : Aazhiyaal (Mathubashini)
- **Language** : Tamil
- **Copy Right** : Author
- **No. of pages** : 60
- **No. of copies** : 500
- **Edition** : First (March 2006)
- **Publisher** : Maru
  Mathubashini,
  20 Dulverton Street,
  Amaroo, Canberra ACT 2914,
  AUSTRALIA.
  E-mail : aazhiyaal @ hotmail .Com
  Tel : + 61262418183
- **Printed by** : Techno Print,
  55 E.A. Cooray Mw, Colombo - 06
  Tel : 0777 - 301920
- **Price** : **RS. 60.00**


**செ.வே.காசிநாதனுக்கு...**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


**நன்றிகள்**

***கவிதைகளைப் பிரசுரித்த***

**எக்ஸில்**

**ஊடறு**

**மூன்றாவது மனிதன்**

**பெண்கள் சந்திப்பு மலர் 2004**

***மற்றும்***

**மு.பொ**

**தெ.மதுசூதனன்**

**நட்சத்திரன் செவ்விந்தியன்**

**பேராதரன்**

**ரகுபதிக்கு...**

## பெண் - மொழி - கவிதை :
### மொழிசார் சாலைப் பயணம்

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை வரலாற்றிலே புதியதொரு சகாப்தத்தைத் தோற்றுவித்தவர் மகாகவி பாரதியார். இவர் புதிய விடயங்களைப் பாடற்பொருளாகக் கொண்டு புரட்சி செய்தார். அப்புரட்சி மொழியின் கையாள்கையிலும் புலப்பட்டது. புதிய பொருள் புதிய நடை சேரும் பொழுது கவிதைப் பொலிவு, கவிதையின் இயங்கு தளம் எவ்வாறு இருக்குமென்பதற்கு பாரதிக்குப் பின்னரான கவிதை வளர்ச்சியும் கவிதை வரலாறும் தெளிவாகச் சுட்டுகிறது.

வரலாற்றில் தமிழ்க் கவிதையின் பரப்பு விரிந்தது. இங்கு இதைவிட கவிதை உருவாவதற்கு ஒரு பரந்தவெளி ஒரு பிரபஞ்சம் தன்னைத் தந்து கொண்டே இருக்கிறது. படைப்பு மனம் தனக்குரிய வரையறைகளுடன் அந்த வெளியில் இயங்குகிறது. படைப்பாளியின் பன்முகப் பார்வை, சமூகக் கண்-

www.tamilarangam.net 

ணோட்டம் மற்றும் அழகியல் யாவும் சேர்ந்து படைப்பாளுமையைப் பண்படுத்துகிறது. இந்த ஆளுமையே அவரவர்களை வேறுபடுத்தி தனித்து அடையாளப்படுத்துகிறது. படைப்பாளுமையின் திறனுக்கேற்ப படைப்புகளின் வெளிப்பாட்டிலும் கட்டமைப்பிலும் வித்தியாசங்களையும் தனிதன்மைகளையும் காணலாம்.

மனிதர்கள் மொழியின் வழியாகத்தான் சிந்திக்கிறார்கள். சிந்திப்பதைச் சொல்கிறார்கள். பகிர்ந்து கொள்கிறார்கள். மொழியின் வழியாகவே இயங்குகிறார்கள். எனவே மொழி நம்மை, நம் சிந்தனைகளை, நம் செயல்களை அடையாளம் காட்டுகிறது. அவற்றின் பிரதிநிதியாக இருக்கிறது.

சிந்திப்பது, பேசுவது, எழுதுவது, மொழியின் அடிப்படைப் பண்புகள் அல்லது தொழிற்பாடுகள் எனக் கூறலாம். மொழியின் நிகழ்வு பல தளங்களில் நடைபெறுகிறது. பல தளங்களாக அமைகின்றது. இலக்கியம் என்பது அத்தகைய நிகழ்வுகளில் ஒன்று. அத்தகைய தளங்களில் ஒன்று. முக்கியமாக பிற கலைகளிலிருந்து இலக்கியம் வேறுபட்டிருப்பது மொழியினாலே ஆகும். அதனுள்ளும் கவிதை என்பது இன்னும் தனித்தன்மை கொண்டது. மொழித்திறன் கவிதையின் கட்டுமானத்துக்கும் உச்ச வெளிப்பாட்டுத் தன்மைக்கும் காரணமாகிறது.

எவ்வாறாயினும் கவிதை மொழி மனத்துடன் நெருங்கிய தொடர்பு உடையதெனக் கூறலாம். இதனாலேயே கருத்துப் புலப்பாட்டில் கவிதை மொழி பல்வேறு தளங்களில் விரியும் சாத்தியங்களைக் கொண்டுள்ளது. ஆகவே கவிதைக்கெனச் சிறப்பியல் நடைக்கூறுகள் அமைவது தவிர்க்க முடியாது.

தமிழ்ச்சூழலில் பெண்களுக்கும் இலக்கிய உலகுக்கும் இடையிலான உறவு சிக்கலானது. அதாவது பெண் எழுத்தாளர்களாகவும் வாசகர்களாகவும் ஏற்கின்ற இவ்வுலகம் வாழ்நிலை நோக்கில் பெண்தன்மைகளை ஆண்நோக்கில் இருந்தே பதிவு செய்கிறது. இந்த ஆணாதிக்க மொழிப் பரப்பில் பெண்கள் குறுக்கீடு செய்து தமக்கான மொழியாகத் தம்மை வெளிப்படுத்தும் மொழியாக ஆக்கிச் செயற்படுவது அவ்வளவு எளிதான செயற்பாடன்று.

இன்று ஆண் பெண் என்ற பாகுபாட்டு அடிப்படையில் பார்க்கின்ற பார்வை இலக்கியம் முதல் பல்வேறு துறைகளிலும் மற்றும் சிந்தனை செயற்பாடுகளிலும் கூட நிலைபெற்று வருகிறது. அதாவது பாலினம் குறித்த பார்வை தவிர்க்க முடியாது. தன்னிலை குறித்த தெளிவோடு இருக்கும் பெண் மாற்றங்களின் தளமாக இயங்குவது தவிர்க்க முடியாது.

♦ ♦ ♦ ♦ ♦

பிறந்த வீட்டில்
கறுப்பி

அண்டை நாட்டில்
சிலோன் அகதிப் பொண்ணு

இலங்கை மத்தியில்
"தெமள"

வடக்கில்
கிழக்கச்சி

மீன்பாடும் கிழக்கில்
நானோர் மலைக்காரி

மலையில்
மூதூர்க்காரியாக்கும்

ஆதிக் குடிகளிடம்
திருடப்பட்ட தீவாயிருக்கும்
என் புகுந்த நாட்டில்
அப்பாடா!
பழையபடி நான் கறுப்பியானேன்

♦ ♦ ♦ ♦ ♦

"இலக்கிய உலகில் கலகம் செய்வதற்கு ஏற்ற வடிவம் கவிதை இலக்கியமே. ஏனென்றால் கவிதை மொழியைப் பற்றிய மொழியாக இருக்கிறது; பெண்ணுக்குள் கிடக்கும் எல்லையில்லாக் கற்பனை வளத்தைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல்மிக்கது; நனவிலி மனத்தோடு அங்கே கிடக்கும் அடக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான குறியீடுகளுக்கு மிகவும் நெருக்கமானது; மேலும் கவிதை எப்பொழுதும் அமுக்கப்பட்ட

ஒரு குழுவின் ஒட்டு மொத்தக் குரலாகப் பதிவாகிறது. எனவே அழுக்கப்பட்ட பெண்ணும் தனக்கான மொழியை உருவாக்கிக் கொள்ள கவிதை வடிவே சிறந்த சாதனம் எனக் கோராகப்லான் (Corakaplan) பெண்ணுக்கான மொழியை உருவாக்க வழி கூறுகிறார். மேலும் கவிதை தான் காரண காரியம், பகுத்தறிவு, தர்க்கம் என்கின்ற முறையில் பெண்ணை மடக்கிப் போடும் ஆணாதிக்க மொழியைத் தகர்த்துக் கொண்டு, எல்லை மீறிய அப்பாலுக்கு அப்பால் அழைத்துச் செல்லும்; பாடைப்பாக்கத்தின் உச்சக்கட்டச் சுவையை எட்டி நிற்கும். எனவே கலகம் செய்ய நினைக்கிற பெண் எழுத்தாளர்களுக்குக் கவிதை சிறந்த வடிவம் என்று பல பெண்ணியலாளர் இக்கருத்தை முன் வைக்கின்றனர்."

(பெண்- மொழி- புனைவு பக்.73)

♦ ♦ ♦ ♦ ♦

ஈழத்துத் தமிழ்ச்சூழலில் பெண்களது சிக்கல்களை அனுபவங்களை முன்னிருத்தி ஆக்கபூர்வமான முற்போக்கான சிந்தனைகளோடு எழுதுபவர்கள் மிகமிகக் குறைவு என்றே கூறலாம். அப்படி எழுதுபவர்களும் ஆணாதிக்க மரபு ரீதியாகக் கையளிக்கப்புடும் கருத்து நிலை இயக்கத்திலிருந்தும் அதன் கலாசார இறுக்கத்திலிருந்தும் விடுபடாதவர்களாகவே உள்ளார்கள். மேலும் அந்த மரபுகளை கலாசாரத்தைக் கேள்விக்குட்படுத்தும் துணிச்சலும் உறுதியும் வீரியமும் இல்லாதவர்களாகவே உள்ளார்கள்.

ஈழத்து நவீன தமிழ் இலக்கியப் பின்புலத்தில் , துணிச்சலும் தெளிவும் ஆளுமையும் திறனும் உள்ள 'பெண் எழுத்தாளர்கள்' என அடையாளம் காட்டுமளவிற்கு யாரும் தோன்றவில்லை. இதற்கு நாம் எண்பதுகள் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. அதிலும் குறிப்பாக கவிதைத் துறையில் தான் பலர் - பெண் கவிஞர்கள் - தோன்றினார்கள்.

எண்பதுகளுக்குப் பின்னர் தமிழ்ச்சமூகத்தில் ஏற்பட்ட சமூக அரசியல் அனுபவத்தின் உட்கிடக்கையும் மற்றும் பெண் விடுதலை சார்ந்த சிந்தனைக்கான தேடலும் பிரக்ஞைபூர்வமாகவும் உணர்வு பூர்வமாகவும் கவிதைகளில் வெளிப்பட்டன. பெண்கள் இலக்கிய வடிவத்துக்குள் மட்டும் சுருங்கவில்லை. மாறாக மொழிக்குள் செயல்படும் பொழுது தம் ஆளுமையின் எல்லைகளை விரிவுபடுத்திக் கொள்ளும் திறன் வாய்க்கப்பெற்றவர்களாகவும், சமூக வெளிக்குள் நிமிர்ந்து குரல் கொடுக்கக் கூடியவர்களாகவும் வெளிப்பட்டனர். அதேநேரம் பெண் போராளிகளாகவும் சமூக அரசியல் தளங்களில் பங்கு கொள்ளும் தன்மையும் வெளிப்பட்டது.

இன்று நாம் தமிழகத்துப் பெண் படைப்பாளிகளது கவிதைகளுடன் ஈழத்துப் பெண் படைப்பாளிகளது கவிதைகளை, ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, ஈழத்துப் பெண் சார் கவிதைகள் வேறுபட்ட வித்தியாசமான தனித்தன்மைகள் கொண்டிருப்பதைக் காணலாம். இக்கவிதைகளின் மொழிதல் வெளிப்பாடுகளும் வேறுபட்டவையாக உள்ளன. இதைவிட பெண் போராளிகள் பலர் கவிதைத்துறையில் ஈடுபாடு கொள்கின்றனர். இந்த அனுபவம் தமிழுக்குப் புதிது. இதன் வெளிப்பாட்டுணர்வு, மொழிதல் யாவும் அவர்கள் இருப்பை கவிதையாக முன்மொழிகிறது.

ஈழத்துவர்களுக்குக் கிடைத்த 'வாழ்புலம்', 'அரசியல்' தமிழகத்துக்குப் பெண் படைப்பாளிகளுக்குக் கிடைக்கவில்லை. நாம் இதனை படைப்புகள் சார்ந்து விமரிசன ரீதியில் சிந்திக்கும் பொழுது மேலும் உறுதியாகவும் தெளிவாகவும் புரிந்து கொள்ள முடியும்.

அதாவது தம் இருப்பு - பெண் இருப்பு - சார்ந்த கேள்விகளுடனும் முரண்களுடனும் இயங்குபவர்கள், தம்மை முற்றிலுமாக இச்சமூகத்திலிருந்து துண்டித்துக் கொள்ள முடியாமல், தம்மை அமைப்பின் குரலாகவும் அதே சமயம் அதற்கு எதிரான குரலாகவும் வெளிப்படுத்துகிறார்கள். இதனால் ஈழத்துப் பெண் கவிஞர்களின் கவிதை மொழி எப்போதும் இயங்கிக் கொண்டேயிருக்கிறது. எப்போதும் ஒரு தேடல், இடைவிடாத ஒரு தேடல் சார்ந்து தான் இயங்குகிறது. தமக்குள்ளேயும் தமக்கு வெளியேயும் கவிதைமொழி தம்மைத் தேடும். தம்மைத் தாமே படைத்துக் கொள்ளும். படைப்பு மொழி புதிதான அர்த்தங்களை வேண்டிடும். இந்தவகையில் பெண்மொழி சாந்த கவிதையாக்கத்தின் பிறப்பு தவிர்க்க முடியாமல் உள்ளது.

"தந்தைவழிச்சமூகம் தன்மேல் சுமத்தியுள்ள அடையாளங்களை அழிக்க வேண்டுமானால் பெண் தற்கால மொழியை உருவாக்க முயல வேண்டும் ; மொழி உலகிற்கு இவள் தன்னுடைய அசைக்க முடியாத ஆற்றலைப் பாய்ச்ச வேண்டும்". இப்படித்தான் ஜூலியா கிறிஸ்தவா போன்ற பெண்ணிய விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள். தமிழிலும் பெண்மொழி உருவாக்கம் என்பது அவசியமாகிறது. பெண் படைப்பாளிகள் தமக்கான மொழியை பிரக்ஞைபூர்வமாக கண்டுபிடிக்க, படைக்க தம்மளவில் கடும் உழைப்பில் ஈடுபட வேண்டும்.

"இருப்பதை உடைக்காமல் - புதிய சொல்லாடலை உருவாக்க வழியில்லை" இந்தப் புரிதல் உணர்வு சிந்தனைவாதமாக மட்டுமல்லாமல் செயல்வாதமாகவும் இருக்க வேண்டும். இந்தப் பின்புலத்தில் ஆழியாள் வருகை அமைந்துள்ளது. இவர் கவிதை மொழியின் புதிய படைப்பாக்கச் சாத்தியப்பாடுகள் பற்றிய தேடலில் பிரக்ஞைபூர்வமாக ஈடுபாடு கொள்வதால் தனக்காக மொழியைத் தேடுகின்றார்.

♦ ♦ ♦ ♦ ♦

உயரும்
மலையடிவார மண்கும்பிகளுள்
திணறி அடக்கமுறும்
மனித மூச்சுகளும்

பள்ளங்களின்
ஆழப் புதைவில்
அலறி ஓயும் குரல்களின்
இறுதி விக்கல்களும்
உண்டு இங்கு

சுவருக்கு செவிகள் உண்டு
இருளுக்கு கூர் விழிகளும் உண்டு
பீறிக் கசியும் ரத்தமாய் மேலும்
உண்டு இன்னொன்று -
அவளுக்கு

♦ ♦ ♦ ♦ ♦

எண்பதுகளுக்குப் பின்னர் ஈழத்தில் உருவான சமூக அரசியல் மாற்றங்களும் மற்றும் சிந்தனைகளின் தாக்கங்களும் கலை இலக்கியத் தளங்களில் பல்வேறு புதிய புதிய போக்குகளுக்கக் காரணமாயிற்று. வாழ்வியலில் ஏற்பட்ட நெருக்கடிகள் அனுபவங்கள் இலக்கியம் சார்ந்த கருத்தாடல்களில் நுண்ணுணர்வுமிக்க அனுபவத்திரட்சிகளால் எதிர்-வினைகள் புரிந்தன. இலக்கியத்தின் களம், எழுத்து யாவும் வெவ்வேறு விதமான படைப்புச் சாதனங்களின் சாத்தியப்பாடுகள் நோக்கி விரிந்தன.

தொன்னூறுகளில் உருவான பெண் எழுத்தாளர்கள் அதுகாறுமான வாழ்வியல் அனுபவம், இருப்பு சார்ந்த தர்க்கபூர்வமான எழுத்துச் செயற்பாட்டில் முழுமையாக ஈடுபடத் தொடங்கினார்கள். ஆண்மையக் கருத்தாக்கம் உருவாக்கியிருக்கும் 'பெண்மை' பற்றிய ஒழுங்குகளை கலைக்கிறார்கள். அத்துடன் இன்றைய பெண்கவிதை வெளிப்படுத்த நினைக்கும் பண்புகள் இவைதான் என்று மட்டும் பட்டியல் போட்டுவிட முடியாது. அத்தகைய பணியைச் செய்வதற்குரிய நேரடிக் களத்தை பெண் கவிதைகள் கொண்டிருக்கவில்லை.

இந்தப் பின்புலத்தில் தோன்றியவர் தான் ஆழியாள். இவரது முதற் தொகுப்பான 'உரத்துப்பேச..' 2000 ஆம் ஆண்டில் வெளிவந்தது. அத்தொகுப்பு அப்பொழுது பலராலும் பேசப்பட்டது. தற்போது இவரது இரண்டாவது தொகுப்பான 'துவிதம்' வெளிவருகிறது. இத்தொகுப்பு ஐந்தாண்டு இடைவெளியில் வெளிவருகிறது.

துவிதம் தொகுப்பில் இடம் பெற்ற கவிதைகளில் பெரும்பாலானவை அவுஸ்திரேலியா வாழ்புலத்தில் உருவானவை. இருப்புக்கும் வாழ்வுக்கும் இடையில் எதிர்வினை புரியும் எழுத்து தன்னளவில் தனக்கேயுரிய தர்க்க முறை அறிதல் முறை சார் மொழியைக் கண்டடையும். அனுபவங்களை அணுகும் கோணமும் தனித்துவமாக வெளிப்படும். இந்த ரீதியில் ஆழியாள் கவிதைகள் புதிய தன்மைகளைக் கொண்டிருக்கின்றன. வாசகருடன் கவிதையைத் தொடர்புபடுத்தும் இழைகள் தெளிவாக உள்ளன. ஆழியாளின் பகிர்ந்து கொள்ளல் மூடப்பட்டதாக இல்லை. திறந்துவிடப்பட்டுள்ளன.

முன்னைய தொகுப்புக்கும் இத்தொகுப்புக்கும் இடையே கவிதை மொழி வெளிப்படுத்தலில் வித்தியாசம் உண்டு 'வாழ்வியல் இருப்பு' 'பெண்ணின் இருப்பு' சார்ந்த அம்சங்கள் கவிதைகளைக் கட்டமைப்பதில் முக்கியம் பெறுகின்றன. குறிப்பாக, வாழ்நிலை மாறும் பொழுது உணர்வு நிலைகளில் சிந்தனைத் தளங்களில் ஏற்ற இறக்கம் ஏற்படுவது இயல்பு. இது கவிதைக்கட்டமைப்பைத் தீர்மானிக்கிறது. அர்த்தங்களைத் தேடுகிறது. அதற்கான வாசகர் தளம் விரிவு பெற்றுச் செல்வதற்கான சுதந்திரமான சாத்தியங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

துவிதம் தொகுதியில் தேடுதல் அனுபவமும், கருத்தும் இணைந்த மொழிதலாக தனக்குரிய மொழியைத் தேடுகிறது. பெண் மொழி சார்ந்த பிரக்ஞை அதுவரை நடைமுறையில் இருக்கும் மரபையும் மொழியையும் அர்த்தங்களையும் மறுத்தே முன்செல்லும். புதிதாகப் பிறக்கும். இது சுதந்திரத்தை நோக்கி நகரும். எந்தப் புதிய பண்பாடும் படைப்பும் மீறல் வகைப்பட்டதாகவே அமையும். ஆழியாள் இந்த மீறலில் உணர்வு

www.tamilarangam.net 

பூர்வமாகவும் அறிவு பூர்வமாகவும் உள்ளார். ஆழியாளின் கவிதை மரபு ஒரே விதமான மன அமைப்பு சார்ந்து இறுகி இயக்கம் கொள்ளும் ஒற்றைப் பரிமாணம் கொண்டதல்ல. கவிதை மொழியும் தன்னளவில் தனக்கான இயங்குதளத்தைக் கொண்டே நகர்கிறது. முதற்தொகுப்பில் இடம்பெற்ற கவிதைகளுக்கும் இத்தொகுப்பில் இடம்பெற்ற கவிதைகளின் பொருட்பரப்புக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. பரிசோதனை முயற்சி பிரக்ஞைபூர்வமாக இழையோடியுள்ளது. ஆழியாள் தனக்கான 'மொழி நடை' இப்படித்தான் என்று உறுதிபடக்கூறும் மனநிலையில் இல்லை. அவரது கவிதைகளும் அப்படித்தான் உள்ளன.

'உரத்துப்பேச', 'துவிதம் ' ஆகிய இரண்டுக்கும் இடையிலான இருப்பு, இயக்கம் வேறுபட்டன. ஆனால் அடையாளத் தேடல் பலநிலைகளில் பல தளங்களில் மேற்கிளம்புகின்றன. இந்தப் பண்பு தொடர்ந்து பேணப்பட வேண்டுமாயின் படைப்பனுபவத்தில் விடாது தொடர்ந்து கரைந்து எழுந்து வரவேண்டும். 'எழுத்து' முயற்சி முனைப்பாகவும் தீவரமாகவும் இருக்க வேண்டும். இருப்புக்கும் எழுத்துக்கும் ஒரு முக்கியமான அரசியல் தொடர்பு உண்டு. இந்த அரசியல் தான் ஆழியாளின் படைப்பு மொழிக்கான உயிர்ப்புத்தளமாக அமைய முடியும்.

"பெண்மொழி" என்று கவிதையில் தனியாக அடையாளப்படுத்த சில தெளிவுகளும் அதற்கான கோட்பாடும் உருவாக வேண்டியிருக்கிறது. பெண்பாலுறுப்பைக் குறிக்கும் வார்த்தைகளையும் ஆணை நோக்கிய பாலியல் விழைவுகளையும் எழுதினால் பெண்மொழி உருவாகிவிடாது. பெண்மொழி என்பது அரசியல் பெண்ணிருப்பைப் பற்றியும் பெண்ணுடலைப் பற்றியும் மொழி மற்றம் சமூக குடும்ப நிறுவன வெளிகளில் உருவாக்கப்பட்டுள்ள அவளுக்கெதிரான கருத்தாக்கங்களையும் மதிப்பீடுகளையும் சிதைப்பதும் அவற்றின் வன்முறைக்கெதிராகக் குரலெழுப்புவதும் தான் பெண்ணின் மாற்று அரசியல். ஆண்மைய சமூகக் கலாசாரத்தின் அகபுற வெளியெல்லைகளை மீறி மொழிக்குள் இயங்குவதன் மூலம் பெண்மொழியை உருவாக்க முடியும்" என்று கவிஞர் மாலதி மைத்ரி குறிப்பிடுவதன் உட்கிடக்கையை நாம் தெளிவாகப் புரிந்து கடந்து சொல்ல வேண்டும். இதன் மூலம் தான் 'பெண் மொழி' குறித்த சிந்தனையும் செயற்பாடும் சாத்தியமாகும்.

ஆழியாள் தன்னளவில் வாசகியாகவும் இருந்து தனது கவிதைமொழி பற்றிய தேடலில் ஈடுபடும் பொழுது தான் 'பெண் மொழி' க்கான சாத்தியங்கள் நோக்கி இன்னும் நகரமுடியும். தேட முடியும். ஈழத்துத் தமிழ்ச் சூழல் அத்தகைய படைப்பாளிகளைத் தான் வேண்டியுள்ளது. ஆழியாள் அந்த நோக்கத்தை ஈடேற்றும் பயணத்தில் தொடர்ந்து பயணம் செய்ய வேண்டும். பாதி வழியில் காணாமல் போய் விடாதிருக்க எப்போதும் விழித்திருக்க வேண்டும். ஆழியாள் படைப்புகளை வாசகர்கள் தமக்கான வாசிப்புச் செயற்பாடுகளால் கட்டவிழ்த்து கட்டமைத்துச் செல்ல வேண்டும்.

"முன் இரவுக் குயில் இட்ட
முட்டை
பொரிகிறது
காலம் இழைத்த
மேகக் கூட்டில்

அங்கு உள்ளிருந்து
இமை திறந்து
விழிமலர்த்திப் பார்க்கும்
இன்னோர் இரவின்
மெல்லிய கீச்சொலி"

**தெ. மதுசூதனன்**

■ உள்ளே...

■எட்ட ஒரு தோட்டம்/17 ■இனவாதி/19 ■அந்தி/21 ■ சின்னப்பாலம்/22 ■ காமம்/25 ■வேற்று வெளி/26 ■கலாசாரம்/28 ■ றோட்டு அளத்தல்/30 ■கி.பி. 2003 இல் தைகிரீஸ்/31 ■அவுஸ்திரேலியப் பருவகாலம் ஒன்று/33 ■தமிழ்மொழி வாழ்த்து/ 35 ■ !.../36 ■மரணம்/37 ■விமான நிலையச் சந்திப்பு/40 ■காலை/42 ■நம்பிக்கை/44 ■ஞாபக அடுக்குகள்/46 ■விடுதலை-1/47 ■விளைச்சல்/49 ■இரை/50 ■பேச்சுவார்த்தை/51 ■குற்றவுணர்ச்சி/52 ■தடம்/54 ■அடையாளம்/55

# எட்ட ஒரு தோட்டம்

கடுங்குளிர் காலத்தின்
கால்கள் நீண்டிருந்தும்
ஆறுதலாய் ஓடி - அதன்
ஓட்டத்தை முடித்த போது

அவிந்த இறாலைப்போல் நிறங்காட்டிய
கடைக்காரி ஒருத்தியிடம்
பெயருடன் நிறமும்
அளவும் அதன் அமைப்பும் கேட்டு
வாங்கிய பூங்கன்றுகளை
உரமான மண் குழைப்பில்
பதித்து உயிர்ப்பிக்க
நீர் ஊட்டினேன்.

பதின்மூன்று புதன்களின் பின்
செழித்துப் பூத்த
வேனிற்காலத்துச் செடிகளின்
நடுவே
வழக்கமான ஒய்யாரத்துடன்
வேர்விட்ட களைகளின் பெயர்கள்
எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

கொள்ளை அழகொடு
காற்றின் வேகத்துக்கு
ரம்யம் சேர்த்து அசைந்த - அம்
மலர்களின் பெயர்களும்
ஞாபகக் கம்பத்தில் இருந்து
வழுக்கினாற் போல் இருந்து.

சுற்றவும் எட்டவும் நின்ற
மரங்களில்
யூக்கலிப்டஸை விடுத்து
வேறொன்றையும்
எனக்குத் தெரிந்திருக்க
நியாயம் ஏதும் இல்லை.

தட்டையாய் விரிந்த
வெளிர் மஞ்சள் நிலப்பரப்பும்
அதில் எறித்த வெயிலும்
என்னில் இருந்து வீணே
அந்நியப்பட்டுக் கிடந்தன.

எனினும்
வெள்ளை நிற வண்ணாத்திப் பூச்சிகளையும்
ஏற்கெனவே அறிந்த
வர்ணங்களைக் கொண்ட
மலர்களின் நிறங்களையும் மட்டுமே
என்னால் அடையாளங் கண்டுகொள்ள முடிந்தது.

*(09.02.2002)*

# இனவாதி

எட்டியெட்டி மெல்ல எட்டி
ஊர்ந்தபடி
தன் எல்லைகளை நீட்டி அணைத்த கடமை
அப்போதைக்குத் தீர்ந்ததென்று

சுழற்புயல் கிளப்பி எறிந்த
அவ் வோரக் கிராமம் போல்
நுரைத்துக் களைத்திருந்தது கடல்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

குடியேற்றத் தடயங்கள்,
சிலாகைக் கட்டைகளாகவும்
நைந்து நிறம் பழுத்துத் தொங்கும்
கிழிசல் சீலைகளாகவும்
தலை சிதறிய
மட்பாண்ட மிதவைச் சில்லுகளாகவும்
அடையாளங் கொண்டன.

பாளைத் தென்னைகள்
கடல்பூத்த பூக்களைப் போல்
அடிப்பாகம் அமிழ்ந்து போக
தலைமட்டும் தூக்கி நிமிர்ந்தபடிக்கு.

வீதிகளிற் பல
வழிகாட்டிப் பலகைகளுடன்
காணமலே போயிருந்தன - கூடவே
கரை விழுங்கித் தொலைந்திருந்தனர்
மிக அதிகம் பேர்
சுவடழிந்து.

அன்றைய மங்கல் நிலவொளியில்
கடற்படுக்கைத் தளத்தினின்றும்
தெத்துப்பல் முறுவல் ஒன்று
கட்டவிழும் பன்னற் பாயாய்
வரக்கண்டேன் விரிந்து

*(28.06.2002)*

# அந்தி

முன் இரவுக் குயில் இட்ட
முட்டை
பொரிகிறது
காலம் இழைத்த
மேகக் கூட்டில்

அங்கு உள்ளிருந்து
இமை திறந்து
விழிமலர்த்திப் பார்க்கும்,
இன்னோர் இரவின்
மெல்லிய கீச்சொலி

*(17.10.2003)*


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சின்னப்பாலம்

போர்க்கால அமைதி
எனது கிராமத்தின்
எஞ்சிய ஊர்மனைகளில்
வெட்ட வெளீரெனக் கிடந்த வயல் வெளிகளில்
சிற்றாறுகள் பின்னி வைத்த
வண்டல் மண் கரைகளில்
சின்னப்பாலத்தின் வெறிச்சோடலில்
ஐந்துவிரல் கொண்டு அறைந்து கிடந்தது.

சின்னப்பாலத்தடிக்கு
நித்தம் செட்டை அடித்து வந்தன
வழக்கத்திலும் கொழுத்த
ஒற்றைக்கால் கொக்குகளும், சுழியோடும் நீர்க்கோழிகளும்.
அவற்றிலும் அதிகமாய்
விளைந்து கிடந்தன
ஊறி அழுகிய பிணங்களின்
வாசனை முகர்ந்து, சுவை அறிந்த
ஜப்பான் குறளிகளும், குறட்டை பெட்டியான் மீன்களும்.

கபறக்கொய்யாக்களோ
எவ்வித நிர்ச்சலனமுமின்றி
நீரிற் பொசிந்தூறிய மனிதக் கபாலங்களை
ஆளுக்கு ஐந்து ஆறாய்ப்
பங்கிட்டுக் கொண்டன - சண்டை சச்சரவின்றி
சமாதானத்துடனே.
தேவைப்படும் போது

அவை பின்னிற்பதில்லை
தம் நாவால் மனிதக் கட்குழிகளை நீவிக்
கறுத்த விழிகளைத்
திராட்சைகளாய் உறிஞ்ச.

சின்னப்பாலத்தடி
தன்னைக் கடந்து போனவர்களை
நினைவில் பதித்துக் கொண்டாலும்,
ஊறி வெடிப்புற்றுச் சிதிலமாய்த் தொங்கும் தசைகளை
ஒட்டவைத்து
அடையாளம் காண்பதற்குள்
தலை கிறுகிறுத்துப் போய்விடும் அதற்கு.

www.tamilarangam.net 

அக் கிறுகிறுப்பிலே அதுவோ தினமும்
"என்னை மட்டும் தனிக்க விட்டு
இந்த மனிதர் எங்கு போயினர்
எங்கு போயினர்"
எனப் பெருங்குரலெடுத்துக்
கதறத் தொடங்குகையில்,

எப்போதும் போல
ஊர்மனைச் சுவர்களில்
பிளவுண்ட கீறல்கள் வெடிப்புற்றுத் தொடர்ந்தன.
சிற்றாறுகள் அன்றைய வண்டலைக்
கரைகளில் கொட்டிக் களையாறின.
வயல்வெளிகளில் காற்றின் ஓலத்துடன்
இரவு வந்து தரையிறங்க
கபறக்கொய்யாக்கள்

உண்டகளை தீர அரைக்கண் மயக்கத்தில்
கோயில் தெப்பங்களாய் மிதந்தன.

*(14.04.2002)*

# காமம்

உயரும்
மலையடிவார மண்கும்பிகளுள்
திணறி அடக்கமுறும்
மனித மூச்சுகளும்

பள்ளங்களின்
ஆழப் புதைவில்
அலறி ஓயும் குரல்களின்
இறுதி விக்கல்களும்
உண்டு இங்கு

சுவருக்கு செவிகள் உண்டு
இருளுக்கு கூர் விழிகளும் உண்டு
பீறிச் கசியும் ரத்தமாய் மேலும்
உண்டு இன்னொன்று
அவளுக்கு

*(10.11.2002)*


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடி

# வேற்று வெளி

வானம் தன் பருத்த இறக்கைகளை விரித்தபடி
முகில் கொழுக்கி நகங்களால்
பற்றி அள்ளிய பதற்றம் தீருமுன்
பூமிக் குஞ்சை
வேற்றுக் கிரக வெளியொன்றில்
தவறவிட்டுத் தேடிக் கொண்டிருந்தபோது

அவ் வெளியின் மருங்குகளில்
ஆதிக்குடிகளுக்கும் ஐரோப்பியருக்குமான
நல்லிணக்கம் போல
ஈரம் உலர்ந்து
காமாலை முற்றிய கோரைப் புல்வெளிகளை
நெடிய நிழலொன்று
கடந்து கொண்டிருந்தது
விரைந்து.

தேடிக்களைத்த வானக் கழுகு
நெடிய நிழலின் காதுகளில்
தொலைத்த பூமிக்குஞ்சைப் பற்றி
அக்குஞ்சின் மொழியொன்றில்
எத்தனித்து வினா எழுப்பி
நின்றது பதிலுக்காய்.

நெடிய அந் நிழலோ
சொந்த மொழி
ரத்தத்தின் சிவப்பில் தெறிக்கும் போது

வந்த மொழி பேசிச்
செரித்து,
தானோர் அந்நிய நிழலான

கதை பகிரத் தொடங்கிற்று.

(10.05.2002)

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

# கலாசாரம்

நேர்கோட்டுக் கூட்டங்கள்
உருவமைத்த
அடுக்குமாடிச் செவ்வகங்களும்
கூரை முக்கோணங்களும்
நீலத்தில் அளைந்து கரையும்
பார்வைகளுக்கு ஓர் இடையூறாய்
கண்ணாடி ஜன்னல்களும்,

அறையுள்
இயந்திரச் சலிப்புடன்
நேர்கோடு மேலும் வரைந்து வைத்த
ஆதாரத் திண்மங்களாய்
மேசை, தாள் கோப்புப் புத்தகங்களோடு
விடைத்த அவன்.

திட நிலைச் சுவர்கள்
நாலு மூலைகளில் நெட்டையாய்க் குந்தியிருந்தன.
இருத்தலின்
சுவாரசியம் அருக
அடைபட்ட நிலைக்கதவின்
பிடிதனை வளையத் திருகித்
திறந்த போது,
சிரித்துக் கலகலத்துப்
பேர் வெள்ளமாய்க் கரை உடைக்கும்
புகுந்த

நேர்கோட்டிற் பயணமுறா ஒளிக்கற்றைகள்

*(11.01.2003)*


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்

## றோட்டு அளத்தல்

தொடுவானக்கடல் உடுத்து
நுரைமுகில் என் முந்தானை அசைவாக
சூரியப் பொட்டிட்டுப்
புறப்பட்டேன் உலாப்போக,
கால்களில்
தேய்ந்த காலணியாய்
வாமனன்.

*(10.06.2003)*

## கி. பி 2003 இல் தைகிரீஸ்

என் மடியில்
வாட்டிய இரு பாண் துண்டுகளுடன்
அமர்ந்திருந்தது ஒரு கோப்பை.
ஆசுவாசமாய் அருகே
தன் ஆவியைப் பறக்க விட்டபடி
சிறு கோப்பிக்கிண்ணம்.

விடிகாலைச் செய்திகள்
தொலை நிழலாய்
சுருள் அவிழ
தூரத்துப் பார்வையில்
தைகிரீஸ் நதிக்கரையைப்
பார்த்திருந்தேன்.

இருண்முகிலாய்ப் பிரண்டெழும்
புகைமூட்டத்துள்
உலகத்துக் கடவுளரெலாம்(?)
ஒற்றுமையாய் வந்தாற் போல
சோதிப் பெரும் பிரகாசத்தில்
ஊனக்கண் கெடப் பார்த்திருந்தேன்.

அசரீரிகளின் ஒலித்தெறிப்பில்
செவிப்பறைகள் அதிர்ந்து நோக
மேலும் பார்த்துக் காத்திருந்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கிட்டவே இப்போது மிகக் கிட்டவே
தெரிகிறது தைகிரீஸ் நதிக்கரை

அற்கு காலகாலமாய்,
காலம் தன்னில் கதைகளை கிறுக்கிச்
சென்ற கைகளை
உயர்த்தி மேலே பிடித்திருந்தது
மெசப்பத்தேமியா

அதில்
பதாகையேதும் தெரியவுமில்லை,
இருக்கவுமில்லை.

சுருங்கிய வெறுங்கைகளே
வெம்பி அல்லாடிச் சொல்லப்
போதுமானதாய் இருந்தன
வேண்டாம் போர் என்று.

கண்கள்
கரும் பிணம் மிதக்கும்
சிறு குட்டைகளாய்
கலங்கிக் குழம்பித்
தெளிவுற முயல

காலியாய்க் கிடந்தன
கோப்பையும்
கிண்ணமும்.

*(27.03.2003)*

## அவுஸ்திரேலியப் பருவகாலம் ஒன்று

தீவாயும் கண்டமாயும்
ஆணாயும் பெண்ணாயும்
அதுவாயும் இதுவாயும்
அர்த்தநாரிஸ்வரமாய்
ஒரு மாபெரும் தளப்பரப்பில்
படர்ந்து விரிந்த நிலமென்று
நினைத்திருக்க.

ஆழத்தின்
குறுக்கு வெட்டுத் தோற்றத்தைக் காட்டிலும்
நிறம் கறுத்த நிழல்களாய்
அசைந்து பாவித்திரியும்
சரித்திரகாலத் தொல் நினைவுகளை,

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

பசுபிக் கடலுள்
ஒரு சேரத்
திணறடிக்கப் புதைக்கும் தேசம் இது
என்பதையும்

கடை இரு
வெறும் நூற்றாண்டுகளின் மேல்
அரிதார நீலம் பூசி
நட்சத்திரங்கள் ஓர் ஆறை
அள்ளி அதில் தெளித்து
உச்சிக் கம்பத்தில் பறக்க விட்ட
வெள்ளை விளைநிலம் இது
என்பதையும்

பெரு மூச்செறிந்து
உரைக்கும் நெடுமரக்காடுகள்
செஞ்சருகாம் இலை உதிர்த்து.

*(12.06.2002)*

# தமிழ்மொழி வாழ்த்து

ஒரு பூஞ்சை
நிராயுத பாணியை
ஏறி நடத்திச் செல்லும்

துப்பாக்கியைப் போல - அவள்
பாடிக் கொண்டிருந்தாள்.

வார்த்தைகளைக் கடந்த
அவ் இசை
நாடக அடுக்குகளில் படிந்த
...ப்புகள் அனைத்தினதும்
...ற்றை மெட்டாக அமைந்திருந்தது.

தன் தாளக் கட்டாக
காத்திருப்பின் நம்பிக்கைகளையும்
ஏக்கங்களையும் கொண்டிருந்ததுடன் - நிகழும்
ஆன்ம வேதனைகளையும் வலிகளையும்
பிழிந்த துயரங்களின் சாரமாகவும்
அது இருந்தது.

காலமற்ற காலக்கணமொன்றில்
தன்னிலை மறந்த போது
நோவுகளின் பிரதிநிதியான
அவளது உரத்த குரலோ
சன்னத்தையொத்து என் மனத்தைச் சீராய் நிறைத்தது.

*(01.12.2002)*


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

!..

நட்டாழக் கடலின்
அமைதி

நிரபராதிகளைக் காப்பாற்றும்
சட்டங்கள்

உண்மையைப் பதிவு செய்யும்
புகைப்படங்கள்

முறுவல் பூத்தபடி
நடனமிடும் இளவரசி

குழந்தைகளுக்கு வழிகாட்டும்
பாதிரிகள்

சுயநலமற்ற தாய்மை

ஆண்கள்

ஆகா என்ன அழகானது இந்த உலகம்

*(27.01.2004)*

# மரணம்

கலங்கரை விளக்கத்து
இரவுக் காவலாளியாகவும்
ஆறடிக் குழியுள்
மௌனம் புடைசூழ இறக்கப்பட்ட
பிணமொன்றைப் போலவும்
தனித்தே
மிகத் தனித்தே இருக்கின்றேன்.

வாசல் மணி ஒலிக்கவில்லை
ஆனால்
கடைசிச் சகோதரியின் உரிமையுடன்
என் கைபற்றி
ஊசிக்குளிர் கவ்வாதிருக்க
பஞ்சுச் சப்பாத்துகளும், இறகுச்சால்வையும் தந்து
அழைத்துச் செல்ல
வந்திருக்கிறாள் அவள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

தோட்டத்து
மேப்பிள் கூடுகளுள்ளே
கீச்சிடும்
அடைபொரிந்த குஞ்சுகளைக் கேட்வாறு
நாங்கள்
வாசற்படி தாண்டினோம் கைகோர்த்த சிறுமிகளாய்.
வியாபாரக் கூவல்கள், வாகன இரைச்சல்களிலிருந்து,

அணுவுலைக் கழிவுகளிலிருந்து,
மேலும் போர்களிலிருந்து நீங்கிப் போனோம் மெதுவே.

தொடர்ந்து வந்த
ஊகங்களற்ற வழிப்பாதையில்
ஆள்புகா வனங்களும், சமுத்திரங்களும்
வரைபடத்து எல்லைகளால் குறுக்கவெண்ணா
நெடுஞ்சாலைகளாய் நீண்டு விரிய,
பக்கக் காட்சிகளாய்
கிளைதாவும் கருமந்திகளையும்
உவந்தாடும் கடற்பாசிகளையும் கண்டேன் நான்.
அருகில்
வாஞ்சைமிகு நடுவயது நட்பாய்
கூடவே
வந்தாள் அவள்.

எதிர்ப்பட்ட யுக சந்திகளில்
மெல்லெனத்
தூரித்துப் பெலத்தது
கடிகாரத்துக் கம்பிகள் மூன்றொடு
காலங்கள் ஆறும்.
காற்றின் சுழலில்
திசைகள் கூத்திட
தீத்திரள் மலைகளை உமிழும் கண்டங்கள்
எழுந்தன
கற்குகை ஓவியமாய்,
அப்போதும் கூட

பிரியத்துக்குரிய ஆசிரியராயப் பேசி விவாதித்தபடி
புத்தகத்தோடும், புன்முறுவலோடும்
என் கூடவே
அமர்ந்திருந்தார் அவர்.

*(23.09.2003)*


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

# விமான நிலையச் சந்திப்பு

ஒன்றரை தசாப்தங்களின் பின்
மீண்டும் சந்தித்துக் கொண்டோம்
இரு வேற்றுக் கண்டவாசிகளாய்
வேறு நிறக் கடவுச்சீட்டுக்களுடனும் - முற்றிலும்
அந்நிய அரசகரும மொழிகளுடனும்.

ஒரே நாட்டுப் பிரஜைகளாய்
இருந்த அன்றோர் நாளில்
பொருந்தாத இரு அரைவட்டங்களைப்
பொருத்தின இலைகள் தொங்கும்
திருவாத்திப் பூமரத்தின் கீழ்
நாம் அறிமுகமானதை நினைவு கூர்கிறாய்.
-இன்னமும் மாறாத அந்தச் சிரிப்பை

எப்போதும் நான் அணியும் சீத்தைச் சட்டையை,
என் சகோதரனை,
பாரம்பரிய ரீதியாக எனக்குக் கிட்டிய
விசேட பெறுபேறுகளையும் கூட
ஆமோதிக்கின்றேன் நான்.

எனினும்
கிடைத்த பொறியியற் புலமைப் பரிசால்
பாடசாலைப் பந்தாய் அடிபட்ட
உன் பெயருடன்,
துருவேறி மட்கின

பின் இருக்கை வைத்த உன் சைக்கிள்
மாத்திரமே
குளிர்ச்சியான அத் திருவாத்தி நிழலின் கீழ்
ஞாபகத்தில் இருப்பதை
எப்படி
உனக்குச் சொல்ல?

(24.02.2005).


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## காலை

நேற்றிரவு நிலவு எறிந்த
நட்சத்திரக் குப்பைகளை
யாரோ சீராய்க் கூட்டி
அள்ளியிருக்கிறார்கள்

அந்த யாரோ யாராயிருக்கும்?
ஆணா பெண்ணா அடுத்தபாலா?

யாரோவை யார்
வேலை ஏவியது?

யாரோவுக்கு
சம்பளம் கொடுப்பது யார்? அது எவ்வளவு?
அது போதுமா?

யாரோவுக்கு இந்த வேலை
பிடிப்பா?

லீவு உள்ளதா யாரோவுக்கு?
பிறகு பென்சன் கிடைக்குமா?

யாரோவுக்கு கவலைகள் அதிகமா?
ம்ம்...
யாரோவைப் பற்றி யாருக்கென்ன கவலை

வேண்டிக்கிடக்கிறது.

நேற்றிரவு நிலவு எறிந்த
நட்சத்திரக் குப்பைகளை
யாரோ சீராய்க் கூட்டி
அள்ளியிருக்கிறார்கள்

(12.12.2003)

# நம்பிக்கை

வழிப்போக்கர் இறுக்கி மூடிய
வீதியோரத்துத்
தண்ணீர்க் குழாயினுள்
நாவை
நீட்டிச் சுழற்றி நுழைத்துப் பார்க்கும்
அந்த நாயிடமிருந்தும்

நேரம் தப்பிப் பிந்தின நேரத்தில்
உண்ணும்
பிரயாணியின் கையில் இருக்கும்
முறுகின கிழங்குத் துண்டத்துக்காய்
சுற்றுக் காத்து நிற்கும்
பத்துக் காகங்களிடமிருந்து

நூல் முகில் கவிந்து கூடித்
திரண்டொழுகும் கணம் கிட்டின
நெடுநீள் *தாஸ்மனில்
துருத்தகரக் கப்பலோட்டும்
ஓர் மாலுமியிடமிருந்தும்

இயற்கையின்
மாறும் உணர்வலை ஓட்டங்களை
மெல்லிய தூரிகைச் சுழற்றல்களில்
கொண்டு வர
பிரம்மப் பிரயத்தனப்படும்
இந்த ஓவியக்காரியிடமிருந்தும்

கற்றுக் கொள்ளப்படும் நம்பிக்கை -
திணிபடும் ஓர் உலக மொழியைப் போன்று.

*(24-01-2004)*

* தாஸ்மன் - தாஸ்மன் கடல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

## ஞாபக அடுக்குகள்

அது சமதானத்தின் காலம்
எனவும்
போர்கள் எல்லாம் புறங்காட்டிப்
போன காலம் எனவும் பேசிக் கொண்டார்கள்.

நாங்கள் நுனி மர உச்சிகள் தாவி
காற்றைக் கடந்ததுடன்
இள முகில்களைக் கிளறி
வற்றாத கிணறுகளுக்காக
வானத்தைக் குடைந்த போது

நட்சத்திரங்கள் வெளிப்பட்டன
புதை குழிகளிலிருந்து -
நாறிக் காய்ந்த பிணங்களின்
விலா என்புகளாய்.

*(28-10-2002)*



## விடுதலை 1

[illegible]த்தாளகதிக்கு ஏற்ப
ஐந்து விரல்களிற் பல
[illegible]க் காலுறைகளை விட்டு வெளியேறாதபடி
[illegible]ரிடுகின்றன - அவற்றையும்
[illegible]யிப் போர்த்துப் பாதுகாத்தபடிக்கு
[illegible]ந் சப்பாத்துக்கள் மினுக்கிய
[illegible]பளப்போடு.

[illegible]னோ கோடை கழுத்திற் கசியும்
[illegible]டையிலிருந்து
liberdade, liberdade, liberdade என
குரல்வளையை உயர்த்திக்
காற்றை இசைக்கிறான்.

காற்று வாத்தியக் கருவியொன்றின்
குழறலுக்கும், மனிதத்தின் அலறலுக்கும்
இடைப்பட்டதான அப் பிரதேசத்தில்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்

குழந்தைகள் ஓடி விளையாடுகிறார்கள்.
நீலப் பச்சை விழிக்காரி தன் சீனத்துத் துணைவியுட ன்
அடவு வைத்துச் சுழல்கிறாள்.
பல விடலைச் சோடிகள்
மேலும் தலைகலைத்து ஆடுகின்றனர்.

ஆமாம் அங்கே

இறுக்கிய கழுத்துப் பட்டிக்காரர்களுக்கு
இடமேதும் இருக்கவில்லை.

சிதறும் அதிர்வுத்துகள்கள் நரம்பெங்கும்
பரவிப் பெருக்கெடுக்க
உடலசைத்து ஆடவும்
அபிநயிக்கவும் முயல்கிறேன் - எனினும்
காலுறைகளைத் தாண்டி அசைவுகள்
வெளிப்பரவாது போயின - மரத்தோ ஒழிந்தோ.

ஏறி நின்றபடியே
என் மூதாதையரின் தோள்களைக்
கூவிச் சபித்துக் கொண்டு - அவ்விடத்தைவிட்டு
அகலாது
நிற்கிறேன் ஆடுவதற்காய்.

*(21.02.2004)*



# விளைச்சல்

■ ...ழுது பண்படுத்தா
■ ...ர் நீர்க்காணி நோக்கி
...ாந்தில் ஏகும் தோணிக்காரா

■ ன் விதைகள் எதுவும் முளை கட்டவில்லை
...ற்றில் பயிர்கள் பூத்துக் குலுங்கவில்லை
...ருவமழையோ பெய்யவில்லை - அங்கு
...திர்கள் முற்றிச் சரியவுமில்லை

...பின்
...தை அள்ளி விதைத்தாய் என்று
...றப்படுகின்றாய் அறுவடைக்கு?

...ொழ்வெனும் அடிவானக் கனவு நோக்கி
...மீள மீளப் பயணிப்பவனே ஓ தோணிக்காரா
உ...ன் துடுப்புக்களைத்
திடமாய் வலித்து முன்னேறுவது
எச் சுக்கான் தரும் பிடிமானத் தொடர்ச்சியில்

*(10.12.2004)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

# இரை

பரிணாமம் கட்டியெழுப்பியிருந்த
அப் புராதன வீட்டின்
விட்டத்திலிருந்து
நூல் இறக்கிக்
கூடு இழைத்துக்
காத்திருக்கிறது இமைச்சிலந்தி
வெட்ட வெட்ட விழித்தபடி
விரிந்த கூடே அதன் பார்வையாய்.

அதன் வழியில்
மணமூறும் லவெண்டர் பூக்களைக்
கொத்தாய் அள்ளி முகர்ந்தபடி
சில்லென வீசி நகர்ந்த
முன்பனிச் சாரற் காற்றில்
அந்திப் பொழுதோ சறுக்கி விழ,

வீட்டின்
தொடர்வேலி மலைத்தடுப்புக்களிடையே
சிக்கிக் கிடந்த சூரியனைக்
கவ்விக் கண்மூடியது இமைச்சிலந்தி

*(17.01.2005)*

# பேச்சுவார்த்தை

அப்பொழுது கைப்புழக்கத்தில் இருந்தவை
எவையென்று நினைக்கின்றீர்கள்?

மேல்
கீழ்
ஒரு மேசை
ஒரு குழு.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net 

## குற்றவுணர்ச்சி

இங்கு
மூச்சைப் பிடித்து குதிகளை எம்ப
கிளம்பும் ஒற்றைத் துள்ளலில்
வானத்தின் சாயம் தலைகளை அப்பும் -
அந்நீலத்தின் நிறங்களோ நான்கு.

வசந்தம், வெயில், கார், பனி, காற்று என
எதிர்புதிரான காலப்பருவங்கள்.
விரிந்து பரந்த நிலப்பரப்பு.
அடர்ந்தும் ஐதானதுமான யூக்லிப்ட்ஸ் மரங்கள்.

அகன்ற வீதியை குறுக்கறுத்து
உருண்டோடும் குட்டி முள்ளம்பன்றி
அது கடந்து போக காத்திருக்கும் கார்கள்
கறுப்பு, வெள்ளை,சிவப்பு,பிறவுன், மஞ்சள் என
மனிதத் தோல்களை மினுக்கியபடிக்கு நிறமூர்த்தங்கள்.

மணலாற்றுக் கம்பிச்சுருள்களில்
மடங்கிச் சுருண்டு துளிர்த்ததைப் போல்
உறை குளிரில் விரியும் குறுணிப் பூக்கள்.
வெயில் ஏற தீப்பிடித்து எரியும் கரும்பச்சை மரங்கள்.

பூச்சி பிடிக்கும் பறவைகள்
பெயர் தெரியா வண்டுகளின் கூச்சல்
அமைதியான இரவுகள்
அள்ளமுடியாத நட்சத்திரங்கள்.

மனிதில் படியும் சினிமாக்கள்
புரியாத மொழிகளில்
தெரியாத சந்தங்களைத் தொட்டு
தத்தியபடி போகும் இசை

வீதிவளைவில் உட்கார்ந்து இயற்கையை வரையும்
யாரோ ஒரு சித்திரக்காரி.
அம்மாவின் பொட்டுப்போல
பொன்னாம் பெரிய நிலவு.

நடு இரவில் மனிதர்களின் கொல்லிய சிரிப்பொலி...

படுக்கையில் நீண்டு உடலைக் கிடத்தி
கால்களைப் பரப்பியபடி
ஆழத்தூங்க முடிவதென்னவோ கண்களுக்கு
இங்குதான்,
அன்றைய தினம் *அபோக்கள் ஒருவரைத் தன்னும்
காணாத வரையில்

*(24.12.1999)*

அபோ - அபோரிஜின் } அவுஸ்திரேலிய ஆதிக்குடிகள்
Abo - Aborigine



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

## தடம்

வெகு இயல்பாய்
என் தடமழியும்
வள்ளம்
பதித்த நீர்ச் சுவடு போல

காற்றுக்
காவும்
மீன் வாசம் போல

கடற்கரைக் காலடியாய்

வெகு இயல்பாய்
என் தடமழியும்
நாலு சுவருள்
ஒற்றப்படும்
மென் உதட்டு முத்தம் போலவும்
எட்டுக்கால் படும் ஒற்றைச் செருப்படி போலவும்.

வெகு இயல்பாய்
என் தடமழியும்
ஒளி விழுங்கின வானவில்லாய்.

*(20.01.2005)*

## அடையாளம்

பிறந்த வீட்டில்
கறுப்பி

அண்டை நாட்டில்
சிலோன் அகதிப் பொண்ணு

இலங்கை மத்தியில்
"தெமள"

வடக்கில்
கிழக்கச்சி

மீன்பாடும் கிழக்கில்
நானோர் மலைக்காரி

மலையில்
மூதூர்க்காரியாக்கும்

ஆதிக் குடிகளிடம்
திருடப்பட்ட தீவாயிருக்கும்
என் புகுந்த நாட்டில்
அப்பாடா!
பழையபடி நான் கறுப்பியானேன்

*(11.12.2005)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

## ஆழியாள்

இயற்பெயர் மதுபாஷினி (1968)

ஈழத்தின் திருகோணமலையில்
பிறந்து, தற்போது
அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து
வருகின்றார்.
ஆங்கில இலக்கியத்தில்
முதுமாணிப்பட்டம் பெற்றுள்ளார்.
இருப்பினும் "நவீன தமிழ்
இலக்கியம்" சார்ந்து தீவிர
வாசிப்பும் தேடலும் மிக்கவராகவே
உள்ளார்.

தொடர்ந்து இவர் பொது
உலகத்துடன் உரையாட, அதன்
முன் உரத்துப்பேச, வாதம் புரிய
வாய்ப்பும் வெளியும் வேண்டி சதா
தனக்குள்ளேயே முரண்களுடன்
வாழ்ந்தும்... இருப்பின் அர்த்தம்
தேடியும்... இருப்பின்
அடையாளத்துக்காகவும்,
அடையாளத்தின் இருப்புக்காகவும்
"எழுத்து" என்ற ஊடகம் சார்ந்து
இயங்குகின்றார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்